# தமிழ் நாடு அரசு

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த
ஆர்) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009

கடித எண். 63568/ஆர் /98-1-நாள்: 18.1.99

அனுப்புநர்

திரு. ந. அய்யாத்துரை, பி.எஸ்ஸி.,
அரசு துணைச் செயலாளர்.

பெறுநர்

செயலாளர்,
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை- 600 002.

ஐயா,

பொருள்: பொதுப்பணி - இளநிலை வணிக நிர்வாகப் பட்டம் பெற்ற பின்னர், முதுநிலை வணிகவியல் பட்டம் பெற்றவர்களைச் கணக்கியலில் கீழ்நிலை மேல்நிலையில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்/ ஆணைகளுக்குத் திருத்தம் வெளியிடப்படுகிறது.

பார்வை: 1. அரசு ஆணை நிலை எண். 215, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்: 31.8.98

2. தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணை செயலரது கடித எண். 1075- வி.ம.அ.து.அ. 5-96. நாள்: 5. 10. 98

பார்வையில் கண்டுள்ள அரசாணையில் இளங்கலை வணிக நிர்வாகத்தில் (B.B.A) பட்டம் பெற்ற பின்னர் பெறப்படும் முதுகலை வணிகவியல் பட்டத்தை (M.Com.) கணக்கியலில் கீழ்நிலை/மேல்நிலை (Lower/Higher Grade in Accountancy) படிப்பிற்கு இணையானதாகக் கருதி பதவி உயர்வு மற்றும் முன் ஊதிய உயர்வு பெற அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் காணும் கடிதத்தில் தேர்வாணைய செயலர் சில திருத்தங்களை அரசாணை நிலை எண். 215, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்: 31.8.98 - ல் வெளியிடுமாறு கருத்து தெரிவித்துள்ளார்.

3. தேர்வாணையச் செயலரின் கருத்தை அரசு தீவிர பரிசீலனை செய்த பின் பார்வையில் காணும் அரசாணையில் தக்க திருத்தங்கள் கீழ்க்கண்டவாறு வெளியிட முடிவெடுத்துள்ளது.

### திருத்தம்

அரசு ஆணை நிலை எண். 215 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்: 3.8.98 ல் பத்தி ஒன்றில் "தமிழ்நாடு மின்வாரிய செயலர், மின்வாரியத்திலுள்ள தணிக்கை அலுவலர் (Auditor) மற்றும் உதவி தணிக்கை அலுவலர் (Assistant Audit Oficer) ஆகிய பதவிகளுக்கு முன் ஊதிய உயர்வு/பதவி உயர்வு வழங்க" என்று உள்ள சொற்றொடர்களுக்குப் பதிலாக கீழ்க்கண்ட சொற்றொடர்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

"தமிழ் நாடு மின்வாரியச் செயலர், மின் வாரியத்திலுள்ள தணிக்கையர் (Auditor) பதவியிலிருந்து உதவி தணிக்கை அலுவலர் (Assistant Audit Officer) பதவிக்குப் பதவி உயர்வு வழங்கவும், முன் ஊதிய உயர்வு வழங்க".

2. அரசு ஆணை நிலை எண். 215, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 3.8.98ல், தற்போதுள்ள பத்தி 2 மற்றும் 3 கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்படுகின்றன.

"2. 14.2..96 மற்றும் 20.3.96. ஆகிய தேதிகளில் நடந்த குழுக் கூட்டங்களில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு இலங்கலை வணிகவியல் பட்டப்படிப்பு படிக்காமல் (B.Com) இலங்கலை வணிக நிர்வாகப் பட்டம் (B.B.A.) பெற்ற பின்னர் முதுகலை வணிகவியல் பட்டம் (M.Com.) பெற்றவர்கள் பதவி உயர்வு மற்றும் முன் ஊதிய உயர்வு பெறும் பொருட்டு கணக்கியலில் கீழ்நிலை/மேல்நிலையில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்கலாம் எனக் குழு அரசுக்குப் பரிந்துரைத்துள்ளது.

3. குழுவின் பரிந்துரைகளைத் தீவிர பரிசீலனை செய்தபின் அரசு ஏற்றுக்கொள்ள முடிவெடுத்துள்ளது. அவ்வாறே இலங்கலை வணிகவியல் பட்டப் படிப்பு படிக்காமல் (B.Com.) இளங்கலை வணிக நிர்வாகப் பட்டம் (B.B.A.) பெற்ற பின்னர் முதுகலை வணிகவியல் பட்டம் (M.Com.) பெற்றவர்கள் பதவி உயர்வு மற்றும் முன் ஊதிய உயர்வு பெறும் பொருட்டு கணக்கியலில் கீழ்நிலை/மேல்நிலையில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்கலாம் என அங்கீகரித்து அரசு ஆணையிடுகிறது."

3. மேலும் மேற்கண்ட அரசாணையில் பார்வை 5-ல் குறிப்பிடப்பட்டுள்ள கடித எண் கீழ்கண்டவாறு மாற்றியமைக்கப்படுகிறது.

" 5. கடித எண். 1075/RND/ A. 5-96"

தங்கள் உண்மையுள்ள,

அரசு துணைச் செயலருக்காக.